"மழைநீர் சேமிப்போம்" "பிளாஸ்டிக்கை தவிர்ப்போம் "

நகராட்சி அலுவலகம்,
தேனி - அல்லிநகரம் ,
நாள் : 19.05.2022.

## நகர்மன்ற அவசரக் கூட்ட அழைப்பிதழ்

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு, சுபகிருது வருடம், வைகாசி மாதம் 06 - ம் நாள் 20.05.2022-ம் தேதி வெள்ளி கிழமை மாலை 04.00 மணி அளவில் நகர்மன்ற கூட்டரங்கில் நகர்மன்ற அவசரக் கூட்டம் நடைபெறும். அது சமயம் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்ற தலைவர்
தேனி -அல்லிநகரம் நகராட்சி

## பொருள் 01:-

அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022இல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின் படி, தேனி அல்லிநகரம் நகராட்சில் எல்லைக்குட்பட்ட கட்டடங்கள் மற்றும் காலிடங்களுக்கு 01.04.2022 முதல் கீழ்கண்டவாறு சொத்துவரி/காலிமனை வரியினை பொதுச்சீராய்வு மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க இந்நகர்மன்ற தீர்மான எண்.14நாள் 08.04.2022–ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

<u>சொத்துவரி:</u> குடியிருப்பு கட்டடங்கள் (**Residential Building**) :

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| <=600 | 1.25 |
| 601-1200 | 1.50 |
| 1201-1800 | 1.75 |
| >1800 | 2.00 |

குடியிருப்பு அல்லாத கட்டடங்கள்(**Non-Residential Building) :**

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

**மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது:**

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
5) வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

| குடியிருப்பு | | | | | |
|---|---|---|---|---|---|
| மண்டலம் | பழைய மண்டல மதிப்பு | கட்டிடத்தின்சதுரடி | | | |
| | | <=600 | 601–1200 | 1201–1800 | >1800 |
| | | 1.25 | 1 . 5 | 1.75 | 2 |
| A | 1.25 | 1.56 | 1.88 | 2.19 | 2 .50 |
| B | 0.85 | 1.06 | 1.28 | 1.49 | 1.70 |
| C | 0.65 | 0.81 | 0.98 | 1.14 | 1.30 |

| வணிகம் | | |
|---|---|---|
| மண்டலம் | பழைய மண்டல மதிப்பு | வரிசீராய்வின் போது வணிக பயன்பாடு கட்டிடங்களுக்கு உயர்த்தப்படும் மண்டல மதிப்பு (*2) |
| A | 3.75 | 7.50 |
| B | 2.55 | 5.10 |
| C | 1.95 | 3.90 |

| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | | |
|---|---|---|
| மண்டலம் | பழைய மண்டல மதிப்பு | வரிசீராய்வின் போது சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டிடங்களுக்கு உயர்த்தப்படும் மண்டல மதிப்பு (*1.75) |
| A | 1.88 | 3.29 |
| B | 1.28 | 2.24 |
| C | 0.98 | 1.72 |

| தொழிற்சாலை | | |
|---|---|---|
| மண்டலம் | பழைய மண்டல மதிப்பு | வரிசீராய்வின் போது தொழிற்சாலை பயன்பாடு கட்டிடங்களுக்கு உயர்த்தப்படும் மண்டல மதிப்பு (*1.75) |
| A | 2.50 | 4.38 |
| B | 1.70 | 2.98 |
| C | 1.30 | 2.28 |

**<u>காலிமனை வரி சீராய்வு:</u>**

காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

| காலிமனைவரி | | |
|---|---|---|
| மண்டலம் | பழைய மண்டல மதிப்பு | வரிசீராய்வின் போது காலிமனை இடங்களுக்கு பயன்பாடு உயர்த்தப்படும் மண்டல மதிப்பு (*2) |
| A-குடியிருப்புபகுதிகள் அமைந்துள்ள தெருக்கள்பகுதி | **0.15** | **0.30** |
| B-முக்கிய சாலைகள்மற்றும் பிரதான சாலைக்கு இட்டுச்செல்லும் பேருந்து வழித்தட சாலைகள் அல்லாதவை | **0.20** | **0.40** |
| C – முக்கிய சாலைகள்மற்றும் பிரதான சாலைக்கு இட்டுச்செல்லும் பேருந்து வழித்தட சாலைகள் | **0.30** | **0.60** |

மேற்கண்டவாறு உயர்வு செய்யப்பட்ட விவரங்களை பொது மக்கள் அறியும் பொருட்டு தேனி மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலகம் வாயிலாக 13.04.2022–ல் தினத்தந்தி நாளிதழ், தினகரன் நாளிதழ்கள் மற்றும் Trinnity Mirror ஆங்கில நாளிதளில் விளம்பரம் செய்யப்பட்டது. மேலும் அலுவலக விளம்பரப்பலகையிலும் அறிவிப்பு வெளியிடப்பட்டு மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உயர்வு செய்யப்படும் காரணிகளின் மண்டல மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டமைக்கு பொது மக்களின் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் ஏதுமிருப்பின் அறிவிப்பு வெளிடப்பட்ட 30 தினங்களுக்குள் எழுத்து பூர்வமாகவோ நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ தேனி–அல்லிநகரம் நகராட்சி ஆணையருக்கு வழங்க தெரிவிக்கப்பட்டிருந்தது. அறிவிப்பு வெளிடப்பட்டு 13.05.2022–ல் 30 தினங்கள் முடிவுபெற்றுள்ளது .மேற்கண்ட கால அளவில் 11.04.2022–ல் ஒரு ஆட்சேபனை மனு மட்டும் பெறப்பட்டது. நகராட்சி நிதி நிலையினை மேம்படுத்தும் பொருட்டு மேற்கண்ட ஆட்சேபனை ஏற்றுக்கொள்ள இயலாத நிலையில் 08.04.2022 தேதிய நகர்மன்ற கூட்ட தீர்மானத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டதின் அடிப்படையில் 01.04.2022 முதல் சொத்துவரி பொதுசீராய்வு மேற்கொள்ளவும், இதில் நிர்ணயம் செய்யப்பட்ட மண்டல மதிப்பினை உறுதி செய்தும், அதற்கான அறிவிப்பினை மாவட்ட அரசிதழில் வெளியிட்டு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 581 /2022/அ1**

**தீர்மான எண்** **:** 15

**தீர்மானம்** **:** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது, வருகை புரிந்த 29 உறுப்பினர்களில் 03வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.ம.காமாட்சியம்மாள், 05 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.எஸ்.கிருஷ்ணபிரபா, 07வது வார்டு உறுப்பினர் திருமதி.பா.செல்வி, 08வது வார்டு உறுப்பினர் திருமதி.கா.பாப்பா, 13வது வார்டு உறுப்பினர் திருமதி.வி.ஆனந்தி, 17வது வார்டு உறுப்பினர் திருமதி.கா.ஜெயா, மற்றும் 18வது வார்டு உறுப்பினர் திருமதி.ச.சரஸ்வதி ஆகியோர்கள் மேற்கண்ட பொருள் குறித்து ஆட்சேபனை தெரிவித்தனர். ஏனைய 22 உறுப்பினர்களின் ஆதரவுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நகர்மன்ற தலைவர்
தேனி -அல்லிநகரம் நகராட்சி